**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF
Calender :
Miscellaneous : CC Case No.59/2021
Preliminary Register :
Sessions : **P.W.3**

Deposition of witness for Prosecution
Defence
Court

Name : திரு.அற்புதராஜ்
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 21.06.2022.

முதல் விசாரணை:–

நான் பூலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து காண்ட்ராக்டர் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி. எனது மனைவி பஞ்சாயத்து தலைவராக இருந்து வருகிறார். இவ்வழக்கு சம்பவம் நடந்தபோது நான் வெளியில் இருந்தேன். கடந்த 14.01.2021ம் தேதி வியாழக்கிழமை எனது தம்பி சாந்தகுமார் சம்பவம் குறித்து தகவல் சொன்னார். நான் உடனடியாக கடலாடி அரசு மருத்துவமனைக்கு வந்தேன். எனது தம்பி மருத்துவமணையில் இருந்தார். நான் பார்த்தபோது எனது தம்பிக்கு இடது மணிக்கட்டு மற்றும் பின்தலையில் காயம் பட்டது. நான் எனது தம்பியிடம் கேட்டபோது சரியாக சுயநினைவில் இல்லை. பேசும் நிலையில் இல்லை. எனக்கு மீனாட்சி என்பவர் சம்பவம் குறித்து சொன்னார். எனது தம்பியை எதிரிகள் கம்பி மற்றும் கம்பால் அடித்ததாக சொன்னார். கடந்த 02.01.2021ம் தேதி விஜயகுமார் என்பவர் எனது மனைவியை அடித்ததாகவும் அது சம்பந்தமாக போலீசாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விஜயகுமார் என்பவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்ததன் காரணமாகவும் பின்னர் ஜாமீனில் வெளிவந்து அடித்துவிட்டதாகவும் சொன்னார். நான் காயம்பட்ட எனது தம்பியை கடலாடி அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–இந்த வழக்கு சம்மந்தமாக உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனக்கு போன்மூலம் சொன்னதின் அடிப்படையில்தான் தெரியும். எதிரிகளின் உறவினர் சாந்தாதேவி என்பவரை தெரியுமா என்றால் தெரியும். உங்கள் மீது நீங்களும் சாந்தாதேவியும் தகாத உறவில் இருந்ததாக நீங்கள் ஒரு வீடியோவை வெளியிட்டதாக ஒரு வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். அது தேர்தலுக்காகவும் மணல் திருடுகிறார்கள் என்று தடையுத்தரவு பெறுவதற்காகவும் பொய் வழக்காகும். அந்த வழக்கு எண் சி.சி.எண்.57/2020 ஆகும். அந்த வழக்கின் எதிரி சாந்தகுமார் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். அவர் உங்களுக்கு எதிராக போலீசாரிடம் சாட்சியம் அளித்ததால் தான் நீங்கள் உங்கள் சகோதரரை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் சகோதரருக்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் 2 நாட்கள் கழிந்து அவருக்கு மயக்கம் தெளிந்தது.